Registered No. M. 889. Registered No. T. 16

THE TRAVANCORE GOVERNMENT GAZETTE EXTRAORDINARY

TRIVANDRUM, FRIDAY, 14TH JUNE 1935 / 31ST IDAVAM 1110.

Proclamation

BY

HIS HIGHNESS SRI PADMANABHA DASA VANCHI PALA SIR RAMA VARMA KULASEKHARA KIRITAPATI MANNEY SULTAN MAHARAJA RAJA RAMARAJA BAHADUR SHAMSHER JANG, KNIGHT GRAND COMMANDER OF THE MOST EMINENT ORDER OF THE INDIAN EMPIRE, MAHARAJA OF TRAVANCORE, ISSUED UNDER DATE THE 30TH EDAVOM 1110 CORRESPONDING TO THE 13TH JUNE 1935.

Whereas, with a view to afford some temporary relief to certain judgment debtors, We had issued the Travancore Judgment Debtors' Temporary Relief Proclamation under date the 1st Meenam 1110 corresponding to the 14th March 1935, and

Whereas the period of operation of the said Proclamation expires on the expiry of three months from the said date, and

Whereas divergent representations touching the said Proclamation have been made to Our Government by and on behalf of various interests;

We are hereby pleased to command as follows :—

1. (1) This Proclamation may be cited as the Travancore Judgment Debtors' Temporary Relief (Second) Proclamation, and

(2) It shall come into force on the 1st day of Mithunam 1110 M. E.

2. (1) This Proclamation shall apply to decrees of the following classes passed by any Civil Court in Travancore, namely :—

(a) decree for money charged on immovable property, or

(b) decree for money against any agriculturist,

not being, in any case, a decree passed not less than six years and three months before the commencement of this Proclamation.

Explanation.— "Agriculturist" means any person whose main occupation or main source of livelihood is agriculture.

(2) The decision of any Civil Court that this Proclamation applies, or does not apply, to any decree of a Civil Court shall be deemed to be an order passed under Section 40 of the Code of Civil Procedure, 1100, liable to be interfered with in every such manner as an order under the said Section may be.

3. Notwithstanding anything contained in any law or in any decree or order of any Court, for a period of three months from the commencement of this Proclamation no person shall be ordered by any Civil Court to be arrested in execution of any decree to which this Proclamation applies.

4. Notwithstanding anything contained in any law or in any decree or order of any Court, for a period of three months from the commencement of this Proclamation no property shall be ordered by any Civil Court to be sold in execution of any decree to which this Proclamation applies if an amount that is not less than ten per cent of the total sum of money payable under the decree on the date of the commencement of this Proclamation is paid on or after such date towards the discharge of the decree, and every Court shall, before ordering the sale of any property in execution of any such decree, allow such time as is reasonably sufficient in the opinion of the Court for the payment of such amount.

5. In computing any period of limitation prescribed by the Travancore Limitation Regulation or by any other law for the time being in force in respect of the execution of decrees of Civil Courts a period of three months from the commencement of this Proclamation shall be excluded in the case of all decrees to which this Proclamation applies.

6. Nothing contained in this Proclamation shall be deemed to interfere with any discretion now vested in Civil Courts to stay or adjourn any sale of property in execution of a decree.

Illustration.—A judgment debtor whose property is sought to be sold in execution of a decree pays into Court a sum which is not quite ten per cent of the total sum of money due under the decree and prays that the sale of the property may be adjourned. The Court is not prohibited, by reason of anything contained in this Proclamation, from adjourning the sale.

7. Nothing in this Proclamation is intended to prohibit voluntary payments to any extent towards the money payable under any decree.

SIGN MANUAL.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

വിളംബരം

[illegible]

[illegible]

പ്രസ്തുത [illegible]

പ്രസ്തുത [illegible]

[illegible] :—

൧. (൧) [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

நாட்டிலை தங்கும் ஸ்ரீ பத்மநாப தாஸ வஞ்சிபால வர் ராமவர்ம குலசேகர கிரீடபதி மன்னே ஸுல்தான் மஹாராஜ ராஜ ராம ராஜ பகதூர் ஷம்ஷேர் ஜங், நைட் க்ராண்ட் கமாண்டர் ஆப் தி மோஸ்ட் எமினெண்ட் ஆர்டர் ஆப் தி இந்தியன் எம்பயர், திருவிதாங்கூர் மஹாராஜா திருவுளங்கொண்டு, 1935-ஆம் வருஷம் ஜூன் மாஸம் 13-ஆந்தேதிக்குச் சரியான 1110-ஆம் வருஷம் வைகாசி மாஸம் 30-ஆந்தேதி பிறப்பிக்கும்

விளம்பரம்.

சில நிர்ப்பான கடனாளிகளுக்குத் தற்காலத்திற்குச் சிறிது உதவி அளிப்பதற்காக, 1935-ஆம் வருஷம் மார்ச்சு மாஸம் 14-ஆந்தேதிக்குச் சரியான 1110-ஆம் வருஷம் பங்குனி மாஸம் 1-ஆந்தேதி திருவிதாங்கூர் நிர்ப்பான கடனாளிகளுக்குத் தற்கால உதவி அளிப்பதைக் குறித்த விளம்பரத்தை நாம் பிறப்பித்திருந்ததனாலும்;

மேற்கூறிய விளம்பரம் வர்த்திதத்திலிருக்கும் கால அளவு மேற்படி தேதிமுதல் மூன்று மாதங்கள் கழிவதனோடு முடிவடைவதனாலும்;

பற்பல தாத்பரியங்களாலும் அவற்றின் சார்பாகவும் மேற்கூறிய விளம்பரத்தைக் குறித்துப் பலதரப்பட்ட விஷயங்கள் நம்முடைய கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக்கொள்ளப்பட்டிருப்பதினாலும்;

நாம் இதனால் கட்டளையிடுவதென்னவென்றால்:—

1\. (1) இவ்விளம்பரத்தைத் திருவிதாங்கூர் நிர்ப்பான கடனாளிகளுக்குத் தற்கால உதவி அளிப்பதைக் குறித்த (இரண்டாவது) விளம்பரம் என்று சொல்லலாம்; மேலும்,

(2) இது கொல்லம் 1110-ஆமாண்டு ஆனி மாஸம் முதல் தேதி முதல் வர்த்திதத்துக்கு வரும்.

2\. (1) இவ்விளம்பரமானது திருவிதாங்கூரிலுள்ள யாதொரு ஸிவில் கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட அடியிற்கண்டவைகளைச் சேர்ந்த டிக்ரிகளுக்குப் பிரயோகப்படும்; அவையாவன:—

எந்த விஷயத்திலும், இவ்விளம்பரம் வர்த்திதத்துக்கு வருவதற்கு ஆறு வருஷங்களுக்கும் மூன்று மாதங்களுக்கும் குறையாமல் முன்னதாகப் பிறப்பிக்கப்பட்ட ஒரு டிக்ரியாகிறது

(a) அசையாப்பொருளின்மீது பொறுப்பேற்றப்பட்ட பணத்துக்காகவுள்ள டிக்ரி, அல்லது

(b) யாதொரு விவசாயிமேரில் பணத்துக்காகவுள்ள டிக்ரி.

விவரணம்.—"விவசாயி" என்றால், விவசாயத்தைத் தம்முடைய பிரதான தொழிலாக அல்லது பிரதான ஜீவனோபாயமாகக் கொண்டிருக்கும் யாதொரு நபர் என்று அர்த்தமாகும்.

C1

(2) இவ்விளம்பரம் யாதொரு ஸிவில் கோர்ட்டாரின் ஏதேனும் டிக்ரிக்குப் பிரயோகப்படுகிறது அல்லது பிரயோகப்படவில்லை என்று யாதொரு ஸிவில் கோர்ட்டார் செய்யும் தீர்மானம், 1100-ஆமாண்டத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 40-ஆவது வகுப்பின்படி பிறப்பிக்கப்பட்டதும் மேற்படி வகுப்பின்படி செய்யப்பட்ட ஓர் உத்தரவு விஷயமாய் எவ்வாறெல்லாம் தவிபடலாமோ அவ்வாறெல்லாம் தவிபடக்கூடியதுமான ஓர் உத்தரவாக எண்ணப்படவேண்டும்.

(3) யாதொரு சட்டத்திலாகிலும் ஏதேனும் கோர்ட்டாரின் யாதொரு டிக்ரி அல்லது உத்தரவிலாகிலும் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இவ்விளம்பரம் வர்த்திதத்துக்கு வரும் தேதிமுதல் மூன்று மாதங்கள் கொண்ட ஒரு கால அளவுக்கு இவ்விளம்பரம் பிரயோகப்படும் ஏதேனும் டிக்ரியை நிறைவேற்றும்பொருட்டு எந்த நபரையும் அரெஸ்ட் செய்யும்படி யாதொரு ஸிவில் கோர்ட்டாரும் உத்தரவு செய்யக் கூடாது.

4\. யாதொரு சட்டத்திலாகிலும் ஏதேனும் கோர்ட்டாரின் யாதொரு டிக்ரி அல்லது உத்தரவிலாகிலும் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இவ்விளம்பரம் வர்த்திதத்துக்கு வரும் தேதிமுதல் மூன்று மாதங்கள் கொண்ட ஒரு கால அளவுக்கு, இவ்விளம்பரம் வர்த்திதத்துக்கு வரும் தேதியில் இவ்விளம்பரம் பிரயோகப்படும் யாதொரு டிக்ரியின்படி கொடுக்கவேண்டிய மொத்தப் பணத்தொகையில் நூற்றுக்குப் பத்து வீதத்துக்குக் குறையாத ஒரு தொகையானது மேற்படி தேதியிலாவது அதற்குப்

பிறகாவது டிக்ரித் தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதை யொட்டிச் செலுத்தப்பட்டால், அத்தகைய டிக்ரியை நிறைவேற்றும்பொருட்டு எந்த சொத்தையும் விற்கும்படி யாதொரு ஸிவில் கோர்ட்டாரும் உத்தரவு செய்யக்கூடாது; மேலும், ஒவ்வொரு கோர்ட்டாரும், அத்தகைய யாதொரு டிக்ரியை நிறைவேற்றும்பொருட்டு ஏதேனும் சொத்தை விற்கும்படி உத்தரவு செய்யுமுன், அத்தகைய தொகையைச் செலுத்துவதற்காகக் கோர்ட்டாரின் அபிப்பிராயத்தில் நியாயமாய்ப் போதுமானதாகவிருக்கும் காலத்தை அனுமதித்துக் கொடுக்கவேண்டும்.

5. ஸிவில் கோர்ட்டுகளின் டிக்ரிகளை நிறைவேற்றுவது சம்பந்தமாய்த் திருவிதாங்கூர் கால நிர்ணய சட்டத்திலாவது அந்தந்தக் காலத்தில் ஊர்ஜிதத்திலிருக்கும் வேறு யாதொரு சட்டத்திலாவது நிர்ணயிக்கப்பட்ட கால வரையறையைக் கணக்காக்கும்பொழுது, இவ்விளம்பரம் ஊர்ஜிதத்துக்குவரும் தேதிமுதல் மூன்று மாதங்கள் கொண்ட ஒரு கால அளவை இவ்விளம்பரம் பிரயோகப்படும் எல்லா டிக்ரிகளின் விஷயத்திலும் விலக்கிவிடவேண்டும்.

6. இவ்விளம்பரத்திற்கண்ட யாதொன்றும், ஒரு டிக்ரியை நிறைவேற்றும்பொருட்டு நடத்தப்படும் யாதொரு சொத்து விற்பனையை நிறுத்திவைப்பதற்காயினும் ஒத்திப்போடுவதற்காயினும் ஸிவில் கோர்ட்டார்களுக்குத் தற்போதுள்ள யாதொரு யுக்தாதிகாரத்தைப் பாதிப்பதாக எண்ணக்கூடாது.

உதாரணம்.—ஒரு டிக்ரியை நிறைவேற்றும்பொருட்டுத் தம்முடைய சொத்தை விற்கும்படி கோரப்பட்டிருக்கும் ஒரு தீர்ப்பான கடனாளியானவர் அந்த டிக்ரியின்படி கொடுக்கவேண்டிய மொத்தப் பணத்தொகையில் நூற்றுக்குப் பத்து விதம் பூராவாயில்லாத ஒரு தொகையைக் கோர்ட்டில் செலுத்தி, சொத்தின் விற்பனையை ஒத்திப்போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார். இவ்விளம்பரத்தில் அடங்கியுள்ள யாதொன்றினாலும் அந்த விற்பனையை ஒத்திப்போடுவதினின்றும் கோர்ட்டார் தடுக்கப்படவில்லை.

7. இவ்விளம்பரத்திற்கண்ட யாதொன்றும் ஏதேனும் டிக்ரியின்படி கொடுக்கவேண்டிய தொகையில் எவ்வளவையேனும் தாமாகவே கொடுப்பதைத் தடுப்பதற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கவில்லை.

(A true translation)

Head Translator to Government.

TRIVANDRUM: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS. 1955.